பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 16 செவ்வாய்க்கிழமை (30.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 66

## யாழ்ப்பாணத்தில் அச்சுத்தாள், மை இல்லை மக்கள் தகவல் அறிய முடியாமல் தவிப்பு

### உதவும் நாடுகளின் தூதுவர்களுக்கு சர்வதேசப் பத்திரிகை அமைப்புகள் கடிதம்

கொழும்பு,ஜன.30

யாழ்ப்பாணத்தில் பத்திரிகை அச்சுத் தாளுக்கும், அச்சடிக்கும் மைக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதன் விளைவாக இலங்கையின் வட பிரதேசத்தில் உள்ள மக்கள் தகவல்கள், செய்திகளை அறியமுடியாமல் தவிக்கிறார்கள்.

இப்படி இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இலங்கைத் தூதுவர்களுக்கு சர்வதேசப் பத்திரிகைச் சுதந்திர அமைப்பும், இலங்கைக்கான கருத்துச் சுதந்திர அமைப்பும் பகிரங்கக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளன. இந்த இரண்டு அமைப்புகளிலும் 11 உலகப் பத்திரிகைச்சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே வீதித் தொடர்பு இல்லை. கடந்த வருடம் கடும் சண்டை நடைபெற்றபோது கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான ஒரே வீதி ஏ-9 வீதி மூடப்பட்டுவிட்டது. யாழ்ப்பாணத்துக்கு ஒரு சில கப்பல்கள் பொருள்களைக் கொண்டு செல்கின்றன. அவற்றில் பத்திரிகை அச்சுத்தாளையும் மையையும் ஏற்றி அனுப்ப அத்தியாவசிய சேவைகள்

(04ஆம் பக்கம் பார்க்க)

## விமானச் சீட்டுக்கு முண்டியடித்தவர்களில் சிலருக்குக் காயம்

யாழ்ப்பாணம், ஜன.30

விமானப் பயணத்துக்கான பயணச் சீட்டுக்களைப் பெறுவதற்கு நாடுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள விமானப் பயண முகவர் நிலையத்தில் பயணச்சீட்டுப் பெறுவதற்காக நேற்றையதினம் என்றுமில்லாதவாறு மக்கள் கூட்டம் பல நூற்றுக்கணக்கில் காணப்பட்டது.

அவர்களில் பலரும் கைகலப்புக்கு தவிர்க்கப்பட்ட கையோடு அதிகாலையிலேயே அங்கு கூடிவிட்டதாக அறியப்படுகிறது.

பயணச்சீட்டுப் பெறுவதற்கான இலக்

(04ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிணக்கை முடிவுக்குக் கொண்டுவர இராணுவத் தீர்வுக்கு இடமே இல்லை!

## அமெரிக்கத் தூதுவர் அடித்துக் கூறுகிறார்

காலி, ஜனவரி 30

இலங்கையில் மிக மோசமான இனப் பிணக்குக்கு இராணுவ வழியில் தீர்வு காண முடியாது என்ற தனது நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உறுதியாக இருப்பதாக அமெரிக்கா அறிவித்திருக்கின்றது.

நேற்று காலியில் ஆரம்பமான இலங்கை அபிவிருத்தி மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் அங்கு இவ்வாறு தமது நாட்டின் நிலைப் பாட்டை மீள அறிவித்தார்.

இந்த மாநாட்டில் மேற்குலக நாடுகளின் சார்பில் மூத்த பிரதிநிதியாக அமெரிக்கத் தூதுவரே பங்குபற்றினார். சீனா, ஜப்பான் போன்ற நாடுகளின் சார்பில் உயர் மட்டப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட போதும் ஏனைய மேற்குலக நாடுகளின் சார்பில் அமெரிக்கா தவிர்ந்த பெரும்பாலான நாடுகள் தூதரக மட்ட அதிகாரிகளையே இந்த மாநாட்டுக்கு அனுப்பியிருந்தன. இதனால் மேற்குலகின் குரலாக அமெரிக்கத் தூதரின் உரையே அங்கு அமைந்திருந்தது. தூதுவர் ஓ பிளேக் அங்கு

(03ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிடியில் இருந்து மக்களை மீட்க இராணுவ நடவடிக்கைக்கு பெருமளவு செலவு

### காலி மாநாட்டில் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.30

விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து மக்களை விடுவிப்பதற்காக - பயங்கரவாதத்தை ஒழிக்கும் இராணுவ நடவடிக்கை மற்றும் சுனாமி நிவாரணம், மக்களை மீள் குடியேற்றம் ஆகியவற்றுக்கு பெருமளவில் நிதியை செலவிட வேண்டியுள்ளது.

இப்படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

காலியில் நேற்று இலங்கை அபிவிருத்தி மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

'இலங்கை அபிவிருத்தி மாநாடு நேற்றுக் காலை 9.30 மணிக்கு காலி லைற்கவுஸ் ஹோட்டலில் மங்கள விளக்கேற்றும் வைபவத்துடன் ஆரம்பமானது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் சரத் அமுனுகம, உலக வங்கி பிரதித் தலைவர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் தலைவர் ஆகியோர் இங்கு விளக்கேற்றி மாநாட்டை ஆரம்பித்துவைத்தனர்.

(03ஆம் பக்கம்பார்க்க)

# இராணுவ ஆக்கிரமிப்பை மக்கள் பலத்துடன் தோற்கடித்து இறுதி இலக்கை எட்டுவோம்!

## தமிழ்ச்செல்வன் சூளுரை

கொழும்பு,ஜன.30

எங்களின் பெரிய சக்தி மக்கள்தான். முழு மக்களும் எங்கள் பின்னால் திரண்டு நிற்கிறார்கள். இராணுவ ஆக்கிரமிப்பைத் தோற்கடிக்கும் திறனும், வலுவும் எம்மிடம் உண்டு. நாங்கள் எங்கள் இலக்கை விரைவில் அடைவோம்.

- இப்படி உறுதிபடத் தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன். இந்தியாவின் 'தெல்கா டொட்கொம்' இணையச் செய்தி நிறுவனத்துக்கு அளித்த ஒரு செவ்வியிலேயே தமிழ்ச்செல்வன் இப்படிக் கூறியிருக்கிறார்.

சமகால இராணுவ, அரசியல் சூழ்நிலை தொடர்பாக அச்செவ்வியில் தமிழ்ச்செல்வன் விளக்கமளித்திருக்கிறார்.

அந்தச் செவ்வியில் அவர் தெரிவித்ததாவது:-

எங்கள் இயக்கத்தைப் பெறுத்தவரை நாம் மிகப்பலமாக இருக்கிறோம். 2001 இல் அந்தப் பலமான நிலையிலிருந்துகொண்டு தான் நாம் அமைதி முயற்சியில் ஈடுபட முன்வந்தோம் என்பதை எமது தேசியத் தலைவர் தமது மாவீரர் தின உரையில் குறிப்பிட்டுள்ளார். நாம் அப்போது வன்னிப் பெரு நிலப்பரப்பை மீளக் கைப்பற்றியிருந்தோம். ஆனையிறவுத் தளத்தைக் கைப்பற்றினோம். அந்தப் பலமான நிலையில் இருந்துகொண்டு தான் கடந்த ஆறு வருடங்களாக சமாதான முயற்சிகளில் ஈடுபட்டோம். இந்த ஆறு ஆண்டுகாலத்தில் எங்களுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்ட பல சதிகளை நாம் முறியடித்துள்ளோம். கடந்த ஐந்து வருடங்களாக எந்த இழப்பையும் அவர்கள் சந்திக்காத காரணத்தால் அவர்கள் தங்களது இராணுவம் பலமாக இருக்கின்றது என நினைக்கக்கூடும்.

### மக்கள்தான் எமது பலம்

என்னைப் பொறுத்தவரை எங்களின் பெரிய சக்தி எமது மக்கள்தான். எமது போராட்டம் சுய பாதுகாப்புக்கான போராட்டம் தான். இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டு அமைதியாக வாழ்வதற்காகவே நாங்கள் போராடுகின்றோம். எங்களின் முழு மக்களும் எமக்குப் பின்னால் திரண்டு நிற்கின்றார்கள். இதுதான் எங்களின் தார்மீகப் பலம். எந்தப் பெரிய வலுமிக்க படையும் எங்களைத் தோற்கடிக்க முடியாது. இலங்கை அரசின் நம்பிக்கை என்ற மாயை தகர்ந்து போவதற்கான சூழ்நிலை எழுந்து வருகின்றது. இராணுவ ஆக்கிரமிப்பைத் தோற்கடிக்கும் திறனும் வலுவும் எம்மிடம் உண்டு. நாங்கள் எங்கள் இலக்கை விரைவில் அடைவோம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நிச்சயமாக இலங்கையைப் பொருளாதார ரீதியில் பலவீனமான நிலைக்கே தள்ளியுள்ளது. தமிழர்களை அழிக்கும் நோக்கில் தனது அளவுக்கும் மிஞ்சி இராணுவத்தை

(04ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைப் பகிஷ்கரிப்பு நேற்று குடாநாடு முழுவதற்கும் பரவியது

யாழ்ப்பாணம், ஜன.30

வடமராட்சியில் இரு மாணவர்கள் காணாமற் போனதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவந்த பாடசாலைப் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று குடாநாடு முழுவதும் பரவியது.

ஹாட்லிக் கல்லூரி மாணவன் மற்றும் வேலாயுதம் ம.வி. மாணவன் ஆகியோர் காணாமற் போயிருந்தனர். அவர்களை விடுவிக்குமாறு கோரி வடமராட்சிப் பாடசாலை மாணவர்கள் கடந்த ஒருவாரமாக பாடசாலைகளைத் தொடர்ச்சியாகப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

நேற்று தொடக்கம் குடாநாட்டில் ஏனைய பிரதேசங்களுக்கும் பாடசாலைப் பகிஷ்கரிப்புப் பரவியது. குடாநாட்டின் சகல கல்வி வலயங்களிலும் கிராமப்புறப் பாடசாலைகளிலும் மாணவர் வரவு வீழ்ச்சிகண்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

நகரப் பகுதிப் பாடசாலைகளிலும் மாணவர் வரவு நேற்று வழமையைவிட மிகக் குறைவாகவே காணப்பட்டது.

மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகச் செய்தி பரவியதையடுத்து நேற்றுக்காலை முதல் பாடசாலைகளின் முன்னால் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

வடமராட்சிப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் நேற்றும் முழு அளவில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-8)

## ஹெல உறுமயவின் எம்.பிக்கு சுற்றாடல் அமைச்சர் பதவி?

கொழும்பு,ஜன.30

ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண. சோபித தேரருக்கு சுற்றாடல் அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளது - என்று அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குள் அண்மைக் காலமாக சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தியடைந்துள்ள நிலையில் ஓமல்பே சோபித தேரர் அரசின் பக்கம் இணைந்து அமைச்சுப் பதவி பெறவுள்ளார் என்று தக

(04 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்குப் புதிதாக ஆள்சேர்ப்பு

இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தி சிவில் நிர்வாகத்தை வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்குப் புதிதாக 2 ஆயிரம் பேர் படையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

அடுத்த மாதம் தொடக்கம் நாடு முழுவதிலுமுள்ள இராணுவ முகாம்களில் படையில் ஆள்சேர்ப்பதற்கான நேர்முகத் தேர்வு நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் மீண்டும் படையில் சேர்ந்து கொள்வதற்கான பொது மன்னிப்புக் காலமும் நீடிக்கப்பட்டுள்ளது என இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சொகுசுமிகு நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலச்சினை கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)

தொடர்பு: ரட்னம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777-903090
0777 246117


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 07 . 12 . 1933



உதிர்வு 31 . 12 . 2006

### குமாரசாமி மகாலிங்கம்
(ஓய்வுபெற்ற இரசாயனவியல் ஆசிரியர்)

கடந்த 31.12.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (30.01.2007) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*"ஈஸ்வரி வாசா"*
*மாலிசந்தி, அல்வாய் தெற்கு, அல்வாய்.* - குடும்பத்தினர். (57536)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 09 . 02 . 1926



விண்ணில் 17 . 12 . 2006

### அமரர் செல்லையா சிவயோகம்

இன்று (30.01.2007) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.05, பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (57595) - குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1931 . 06 . 04



ஆண்டவன் அடியில் 2006 . 02 . 11

அமரர்
### குமாரசாமி சண்முகலிங்கம்
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட புகையிரத நிலைய அதிபர்)

திதி: 30.01.2007

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"
*அப்பா! எங்களின் இதயத் தெய்வமே!*
*எங்களின் உயர்வான வாழ்விற்காய்*
*திங்களாய் வாழ்ந்து காட்டிய அப்பாவே!*
*உங்களின் உயர்ந்த இலட்சியங்களை*
*எங்களின் நெஞ்சினிலே சுமந்து*
*நீங்கள் காட்டிய சத்தியப் பாதையிலே*
*நாங்கள் உறுதியுடன் செல்லுவோம்!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மங்கை இல்லம்,
சந்தை வீதி, உடுப்பிட்டி.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள். (57606)

## தவறிவிட்டது

வை.பேரம்பலம், தலையாழி, கொக்குவில் 251341630V இல. கொண்ட அடையாள அட்டை சிறு பேர்ஸுடன் அத்தியடி, நாவலர் றோட் சந்தியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 129, தேவாலய வீதி, யாழ்ப்பாணத்திலோ அல்லது தலையாழி, கொக்குவிலிலோ ஒப்படைக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

## விற்பனைக்கு

கண்டி, ஹற்றன் ஆகிய பகுதிகளில்
வீடு, காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: எஸ். எஸ்.குமார்
தொ.பே.: 0776938823

## தவறிவிட்டது

G.கிறிஸ்ரி பிரேமகுமார் என்பவரது அடையாள அட்டை 590080659V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து. 141, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் அல்லது 077 3628183 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.


## இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு
## பிருந்தாவன் கல்லூரி

பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது

கல்வி நெறிகள்
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

அடிப்படைத் தகைமை க.பொ.த (உயர்தரம்) 2 பாடங்களில் சித்தி

பதிவுகள் தற்போது மேற் கொள்ளப்படுகின்றன.

**Company Secretarial Services(Pvt.)Ltd.**
285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சேதுப்பிள்ளை செல்வத்துரை



முல்லைத்தீவு, வெள்ளாம் முள்ளிவாய்க்காலைப் பிறப்பிடமாகவும் சிவன்கோயில் வீதி, மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சேதுப்பிள்ளை செல்வத்துரை 27.01.2007 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வத்துரை (விதானையார்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விநாசித்தம்பி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற தம்பையா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற தம்பையாவின் சகோதரியும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, திலவதி, இராசலட்சுமி, சாந்தநாயகி, வரதராஜா, கமலாம்பிகை (ஆசிரியை, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தி.) புவனேஸ்வரி(ஆசிரியை, யா/சன்மார்க்க ம.வி.) ஆகியோரின் அன்புத் தாயும் சறோஜினிதேவி, வைரமுத்து(ஆனைப்பந்தி), அம்பலவாணப்பிள்ளை (தபாலதிபர் - கைதடி), காலஞ்சென்ற தமிழ்வாசன்(கிராம சேவையாளர்), பிரபாலினி (ஆசிரியை - யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை) நாகராஜா(லண்டன்), முருகதாஸ் ஆகியோரின் மாமியாரும் தவராஜா(லண்டன்), நந்தகுமார்(லண்டன்), சுபாசினி(லண்டன்), ராஜ்குமார், தர்சினி, தயானி(முகாமைத்துவபீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற றஜிகாந், ரவீந்திரநாத்(பொறியியலாளர் - லண்டன்), மிராளன்(பல்கலைக்கழகம் - வயம்ப), பிரதீபன் (மாணவன், விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), பிரசன்னா(மாணவன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நாவேந்தன் (மாணவன் - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற நிவேதனா, மாதுமை, மதுரா, சாய்மீரா(மாணவிகள் வவுனியா றம்பைக்குளம் மகளிர் கல்லூரி), மாதங்கி, உமையாள்(மாணவிகள், யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.01.2007 ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*138/1 பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.* (57589)
தகவல்:
செ.வரதராஜா(மகன்)
0242221656

### திருமதி சின்னத்துரை இரத்தினம்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திருமதி சின்னத்துரை இரத்தினம் 27.01.2007 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும் லோகநாயகி (கனடா), லோகநாதன் (ஜேர்மனி), பத்மநாதன் (பிரான்ஸ்), மகேந்திரநாதன் (மானிப்பாய்), இராசநாயகி (கனடா), இராசநாதன் (கனடா), இரஞ்சிதநாயகி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் சிவஞானாம்பிகை ஜெயா, திலகவதி, திருப்பரநாதன், ஜெயலட்சுமி, இரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2007)புதன்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சின்னத்துரை மகேந்திரநாதன்
(மகன்),
மூத்ததம்பி ஒழுங்கை,
மானிப்பாய். தொ.பே.: 0779590778
கனடா தொ.பே.இல. 0114167248742

## முக்கிய அறிவித்தல்

கிருஷ்ணா அடகு கடை,
370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 5046
பதிவு இல. J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு(31.12.2005) முன்னர் அடகுவைத்து மீட்கப்படாதிருக்கும் அடகு நகைகள் யாவும் 2007 ஆம் ஆண்டு 2 ஆம் மாதம் 28 ஆம் திகதி (28.02.2007) விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

370,K.K.S. Road,
Jaffna.
A.S.சுரேந்திரன்
உரிமையாளர்.

## பாலின் விலை அதிகரிப்பு

எமது சங்கம் 01.02.2007 ஆம் திகதியிலிருந்து ஒரு லீற்றர் பாலின் விற்பனை விலையை 40 ரூபாவாக அதிகரிக்கவுள்ளது.

பாலின் உற்பத்திச் செலவு அதிகரிப்புக் காரணமாக விற்பனை விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாதுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி/51940)

## நெஞ்சை விட்டகலாத ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 16 . 03 . 1967



விண்ணில் 10 . 02 . 2006

### கெங்காதரன் கணேசலிங்கம் (கணேஸ்)

திதி : திரயோதசி 30.01.2007

அன்பான எம் அப்பாவே!
குடும்பத்தின் ஒளி விளக்காய்
பாசமுடன் எமை வளர்த்து
நல்வழியில் எமை வாழ வைத்து
எமை எல்லாம் ஏங்க வைத்து
விண் சென்றீர்களே!
எம் அன்பு அப்பாவின்
ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

*344, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.* குடும்பத்தினர். (57591)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

எமது குடும்பத்தலைவி
### திருமதி தங்கரட்ணம் ருக்குமணிதேவி



மண்ணில் 19-05-1948
விண்ணில் 30-01-2005

ங்க மனையாளாய் தாயாகி வந்தவளே!
எங்கள் குலமுய்ய என்றென்றும் வாழ்ந்தவளே!
உங்கள் கையால் உணவுண்ட காலங்கள்
எங்கள் மனங்களில் இனிக்குதம்மா
இன்றைக்கும்
தாங்க முடியாத துன்பத்தால் அழும் போது
தங்கக்கையாலே தாங்கித்தான் கொள்வாயே!
ஏங்கித் தவிக்கின்றோம்! இன்னமும் அழுகின்றோம்
இங்கொருக்கால் வந்து எம்மிடையே பிறந்திடம்மா!
ஈதெங்கள் எண்ணம் இடையறா விண்ணப்பம்!
இறைவா இதற்கு இசைந்திடுவாய் இரக்கமுடன்!
அதுவரை எம் அன்னாய்! அடைக நீ சாந்தி.

நினைவகலாத் துயருடன்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*டச்சு வீதி,*
*உடுவில்* (57599)

## மரண அறிவித்தல்கள்

### சிவஸ்ரீ கார்த்திகேயக்குருக்கள் தியாகராஜக்குருக்கள்
(கீரிமலை நகுலேஸ்வர ஆதீனம்)

கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் தியாகராஜக்குருக்கள் 28.01.2007 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.01.2007 திங்கட்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*வடலியடைப்பு பிள்ளையார் கோயிலடி,*
*பண்டத்தரிப்பு.* (57617)
தகவல்:
நி.வாகீசசர்மா(மகன்).

### கந்தையா பத்மநாதன்



ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பத்மநாதன் நேற்று (29.01.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் வரதீவு, 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் தனலெட்சுமியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற பத்மராசன் மற்றும் வசந்தகுமார் (சித்தி விநாயகர் பான்சி அன் வீடியோ விஷன், ஒட்டுமடம்), மோகன்ராஜ், ரஞ்சித்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரபகலா (T.C.T., நாவலர் வீதி) அவர்களின் அன்பு மாமனும் நிகேதனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2007) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப.வசந்தகுமார்
(சித்திவிநாயகர் பான்சி அன் வீடியோ விஷன்)

*01, ஒடை லேன்,*
*ஒட்டுமடம்.* (57612)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 9933, 222 3837 - 222 9944

## சர்வதேச சமூகத்தின் ஆதரவு சமாதானத்துக்கா? சண்டைக்கா?

"சர்வதேச சமூகம் தன்னிடமுள்ள பலமான சக்தியை உத்வேகத்தோடு பயன்படுத்தாமல் மென்போக்கு நிலையைக் கடைப்பிடிப்பதனாலேயே இலங்கை அரசு அதிகாரத்தனத்துடன் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகளையும் திட்டங்களையும் மேற்கொள்கின்றது."

-இவ்வாறு குற்றம் சுமத்தியிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் பொறுப்பற்ற-அசிரத்தை-போக்கையும் அவர் தோலுரித்துக் காட்டியிருக்கின்றார்.

இலங்கைப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுசாத்தியமற்றது என்று சர்வதேச சமூகம் திரும்பத் திரும்பக் கூறுகின்றது. ஆனால், இராணுவத் தீர்வு முயற்சியில் முனைப்புக் காட்டி, வலிந்த படை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசைப் அப்பாதையில் இருந்து திருப்பி, சரியாக வழிநடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அது பின்நிற்கின்றது. இது விடயத்தில் தனக்குள்ள பலத்தைப் பயன்படுத்துவதற்கு சர்வதே சமூகம் விருப்பமற்றுள்ளது; அல்லது இயலாத் தன்மையுடனுள்ளது. மொத்தத்தில் இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பத்தில் தனக்கு மிகுந்த அக்கறையுள்ளதாகக் காட்டிக் கொள்ளும் சர்வதே சமூகம், மறுபுறத்தில் நிலைமைச் .சீர்செய்வதற்கு உருப்படியான செயற்பாடு எதனையும் மேற்கொள்ளவில்லை. வெறும் அறிக்கைகளை வெளியிடுவதால் தமிழ் மக்களுக்கு நீதி கிடைத்துவிடப் போவதுமில்லை, இராணுவ முனைப்பில் தீவிரம் காட்டி நிற்கும் இலங்கை அரசு அமைதித் தரப்பின் பக்கம் திருப்பப் போவதுமில்லை.- இப்படி யதார்த்தத்தை எடுத்து விளக்கியிருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

வெறும் அறிக்கைகளால் பயனில்லை; அதற்கு அப்பால் உருப்படியாக- பயனுள்ளதாக- வேறு ஏதும் செய்யுங்கள் என்ற சாரப்பட அமைந்த இந்தக் கோரிக்கையை ஒரு முக்கியமான காலகட்டத்தில்தான் சர்வதேச சமூகத்தின் முன்வைத்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர். பொருத்தமான நேரத்தில் முன்வைக்கப்பட்ட பொருத்தமான சமிக்ஞை இது.

இலங்கைக்கு உதவும் அமைப்புகளின் முக்கிய மாநாடு நேற்றும், இன்றும் காலியில் நடைபெறுகின்றது. இலங்கைக்கு உதவும் சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்புகள், பல்வேறு சர்வதேச வர்த்தக அமைப்புகள், முதலீட்டு நிறுவனங்கள், சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் என ஐம்பதிற்கும் அதிகமான ஸ்தாபனங்கள் மற்றும் தேசங்களைச் சேர்ந்த இருநூறுக்கும் அதிகமான பிரதிநிதிகளும் இராஜதந்திரிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த இரண்டு நாள் மாநாட்டை நேற்று ஆரம்பித்து வைத்தார்.

இந்த மாநாட்டின் மூலம் பெருமளவு உதவித் திட்டங்களுக்கான உறுதிமொழிகளை சர்வதேச அமைப்புகளிடமிருந்து இலங்கை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என கொழும்பு அரசுத் தலைமை எண்ணுகின்றது. இந்தப் பின்னணியிலே இலங்கை விடயத்தில் ஆக்கபூர்வமாக ஏதாவது செய்யுங்கள் என்று சர்வதேச சமூகத்தைப் பார்த்து, நேற்று இந்த மாநாடு ஆரம்பிக்க இருக்கும் சமயத்தில் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

அமைதி முயற்சிகளில் முழு ஈடுபாட்டுடன் பங்குபற்றாமல், இராணுவத் தீர்வு முனைப்புடன் செயற்பட்டால் இலங்கைக்கு உதவிகள் வழங்கப்படமாட்டா என்பதை 25 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை தற்போது வகிக்கும் ஜேர்மனி அறிவித்துவிட்டது. அதன்படி உதவித் திட்டங்களையும் அது நிறுத்தியிருக்கின்றது.

தற்போதைய உதவும் அமைப்புகளின் இரு நாள் மாநாட்டின் போதும், அது போன்று இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் அர்த்தமுள்ள நடவடிக்கை எதையாவது சர்வதேச சமூகம் எடுக்க வேண்டும் என்பதே தமிழர்களின் - புலிகளின் - தரப்புக் கோரிக்கையாக இருக்கின்றது.

அந்த நோக்கோடும், அந்தப் பின்னணியிலும்தான் மேற்படி விடயங்களை புலிகளின் அரசியல் பொறுப்பாளர் இந்தச் சமயத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

சர்வதேச சமூகம் என்ன செய்யப் போகின்றது? இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசுத் தலைமையை சரியான வழிக்குத் திருப்பும் அர்த்தமுள்ள - அழுத்தம் தருகின்ற - நடவடிக்கையை எடுக்கப்போகின்றதா? அல்லது இராணுவத் தீர்வு முனைப்பில் தீவிரமாக இருக்கும் கொழும்பு அரசை ஊக்கப்படும் விதத்தில் உதவி வழங்க உறுதியளித்து, ஒத்தாசை செய்யப்போகின்றதா?

பெரும்பாலும் இன்று மாலை, உதவும் அமைப் புக்களின் கூட்டத்தின் இறுதியில், இந்த விவகாரத்துக்கு முடிவு தெரியுமென எதிர்பார்க்கலாம்.

## கொக்குவில் மேற்கில் கொள்ளை; நகை, பணம் பொலிஸாரால் மீட்பு!

### இருவர் நீதிமன்றில் ஆஜர்

கொக்குவில் மேற்கில் வீடு ஒன்றில் கொள்ளையிடப்பட்ட ஆறு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் பெருந்தொகைப் பணமும் மீட்கப்பட்டுள்ளன. அத்தோடு, கொள்ளையுடன் சம்பந்தப்பட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொக்குவில் மேற்கில் உள்ள வீடு ஒன்றில் இம்மாதம் 24ஆம் திகதி நடைபெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்த பொலிஸார் இருவரைக் கைதுசெய்தனர். அவர்களிடம் இருந்து பிரஸ்தாப வீட்டில் கொள்ளையிடப்பட்டதாகக் கருதப்படும் ஆறுலட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் மற்றும் பணத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர். பொலிஸார் கைதுசெய்த சந்தேக நபர்கள் இருவரும் யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா முன்நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இச் சம்பவம் குறித்து கைதான இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து, மேலும் விசாரணைகளை மேற்கொள்ளும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

அத்தோடு, அவர்கள் மேலும் கொள்ளைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்தார். (அ-1)

## மருத்துவ மாத இதழ் நாளை வெளிவருகிறது!

யாழ்ப்பாணம், ஜன.30

குடாநாட்டில் பணிபுரியும் மருத்துவர்களின் நலன்கருதி மாதாந்த இதழ் ஒன்று வெளிவர உள்ளது.

யாழ்.மருத்துவர் கழகத்தினர் வழங்கும் 'JMA News' என்ற அந்த இதழ் நாளை வெளியிடப்படுகிறது.

புதிய மருத்துவத் தகவல்கள், பிந்திய சிகிச்சை முறைகள் மற்றும் ஆய்வுகள் குறித்து குடாநாட்டு மருத்துவர்கள் அறிந்து கொள்ளக் கூடியதாக, அவர்கள் தமது மருத்துவ அறிவைப் பெருக்கிக்கொள்ள உதவும் வகையில், இந்த இதழ் தொகுக்கப்பட்டுத் தொடர்ந்து மாதாந்தம் பிரசுரமாகும்.

இடையீடற்ற மருத்துவக்கல்லூரி என்ற இலக்குடன் வெளியிடப்படும் இந்த மாதாந்த இதழ் குடாநாட்டு மக்களின் வைத்தியத் தேவைகளை இங்கு பணிபுரியும் மருத்துவர்கள் ஆகப் பிந்திய, புதிய புதிய முறைகளில் நிறைவேற்றுவதற்கு அறிவூட்டி வழிகாட்டும் பணியைச் செய்யும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாளை வெளிவரவுள்ள முதலாவது இதழில் குடாநாட்டு மக்களை "கசக்கிப் பிழியும்" சிக்குன்குனியாவுக்கான வைத்திய சிகிச்சை குறித்து விசேட தகவல்கள் தரப்பட்டுள்ளன.

இதுவரை கொழும்பில் உள்ள மருத்துவ சங்கத்தினரால் வெளியிடப்படும் இதழ் மூலமே ஆகப் பிந்திய ஆராய்ச்சி மற்றும் சிகிச்சை முறைகளை இங்குள்ளோர் கற்றுணரக்கூடியதாக இருந்தது. (அ)

## ஊரடங்கை மீறியதாக மேலும் ஐவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன.30

குடாநாட்டில் ஊரடங்குச் சட்டத்தை மீறி நடமாடிய மேலும் ஐவர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

குருநகர், தண்ணீர்தாங்கி வீதி, அடம்பன் வீதி ஆகிய இடங்களைச் சேர்ந்த ஐவர் படையினரால் கைது செய்யப்பட்டு, யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா முன் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

ஊரடங்கு அமுலில் உள்ள வேளையில் நடமாடி கொலை, கொள்ளைகளில் ஈடுபடுவோரை கைது செய்யுமாறு - பிரதம நீதியரசர் யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதிக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏழுபோர் கைது செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. (1)

## இருவரைக் காணவில்லை

குடாநாட்டில் கடந்த சில தினங்களில் இரு இளைஞர்களைக் காணவில்லை என உறவினர்களால் மனித உரிமை ஆணைக்குழு வில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

யாழ். கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த காங்கேசன் மயூரன் (வயது - 22) என்பவரை இம்மாதம் 25ஆம் திகதியிலிருந்து காணவில்லை என்றும் வீட்டிலிருந்து வங்கிக்குச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை -

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தியாகலிங்கம் கருணாகரன் (வயது - 31) என்பவரை நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் காணவில்லை என முறையிடப்பட்டுள்ளது. இவர் ஒரு நகைக்கடை உரிமையாளர் என தெரிவிக்கப்படுகிறது. (1-79)

## மீன்பிடிக்க நெடுந்தீவில் நேரக் கட்டுப்பாடு

நெடுந்தீவில் மீனவர்கள் கடலுக்குச் செல்லும் நேரம் வரையறை செய்யப்பட்டுள்ளது. காலை 6 மணிக்கும் பிற்பகல் 6 மணிக்குமிடையில் மட்டுமே தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நேரத்திற்குள் மீனவர்கள் கரைக்குத் திரும்பிவிட வேண்டும் எனவும் பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்துள்ளதாக வும் தெரியவருகிறது.

முன்னதாக அதிகாலையிலேயே மீனவர்கள் தொழிலுக்குச்சென்று திரும்புவதற்கு அனுமதிக்கப்பட்டி ருந்தது. (அ)

## இனப்பிணக்கை முடிவுக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறிய கருத்துக்களின் சாராம்சம் வருமாறு:-

புதிய அமைச்சரவையை நியமித்த ஜனாதி பதிக்கு எமது வாழ்த்துக்கள்.

இலங்கையும், அமெரிக்காவும் பலமான உறவுகளைக்கொண்ட நீண்ட கால நட்பு நாடுகள். இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கும், "சுனாமி" பாதிப்பிலிருந்தான மீட் சிக்கும் தொடர்ந்து உதவுவதில் உங்கள் நாட்டின் விருத்தியை கடந்த இரண்டு தசாப்த காலமாகப் பெரிதும் பாதித்து நிற்கும் இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு ஒன்றைக் காணும் விடயத்தில் இலங்கையுடன் சேர்ந்து உழைப்பதிலும் அமெரிக்கா தொடர்ந்தும் பற்றுறுதி கொண்டுள்ளது.

அமெரிக்கா போன்று இலங்கையும் பயங் கரவாதத்துக்கு எதிரான போராட்டத்துக்கு முகம் கொடுத்து வருகின்றது.

புலிகளுக்கு நிதி மற்றும் ஆயுதங்கள் கிடைப்பதைத் தடுப்பதன் மூலமும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உதவிகளை வழங்குவதன் மூலமும் -

இலங்கை இராணுவ ரீதியாகத் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான பயிற்சி மற்றும் தளபாடங்களை வழங்குவதன் மூலமும்-

பயங்கரவாதத்துடன் மோதுகின்ற இலங்கைக்கு உதவும் வலுவான ஆதரவாளர்களாக நாங்கள் உள்ளோம்.

### ஐம்பது வருட கால உறவு

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான அபிவிருத்திப் பங்காளி என்ற உறவு ஐம்பது வருடகாலம் பழமையானது.

வெளிப்படையான செயற்பாடு, ஊழ லைக் களைதல், சர்வதேச பொருளாதாரத்துடன் நிகராகச் செயற்படுதல் போன்ற பல்வேறு விடயங்களுக்கு உதவுவதன் மூலம் இலங்கையில் ஜனநாயக நடைமுறைகளை முன்னெடுக்கவும் உரிய ஆதரவை அமெரிக்கா வழங்கி வருகின்றது.

இலங்கையை கடந்த 25 வருடங்களுக்கு மேலாகப் மோசமாகப் பாதித்து நிற்கும் பிணக்குக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று காணப்படாத நிலையில் அமெரிக்கா மட்டுமல்ல வேறு எந்த உதவும் நாடும் வழங்கும் அபிவிருத்தி உதவிகளும் நிலையான பெறுபேற்றைத் தரமாட்டா.

இந்த மோசமான பிணக்குக்கு இராணுவ வழியிலான தீர்வு ஏதும் இல்லை என்ற எமது நிலைப்பாட்டில் நாம் இப்போதும் உறுதியாக இருக்கிறோம்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை யைப் பெறுவதற்கு நீங்கள் எடுத்த முயற்சியை விதந்துரைக்கின்றோம். ஏனென்றால் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நீடித்த ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்துவதற்கான அடிப்படையாக அமையக்கூடிய - பயனுள்ள - அதிகாரப் பகிர்வு யோசனை ஒன்றுக்கு இந்த நாடாளுமன்றப் பெரும்பான்மை உதவும் என்பதால்.

ஏற்கனவே மாகாணங்களுக்கு இடையில் காணப்படும் சமச்சீரற்ற வளர்ச் சிப் போக்கை இந்தப் பிணக்கு மேலும் மோசமாக்கியிருக்கின்றது. மேற்கு மாகாணம் தொடர்ந்தும் சுபீட்சம் பெறும் அதேசமயம், யுத்தம் காரணமாக வடக்கு - கிழக்கின் பெரும் பகுதி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

### மோதல்கள் தொடர்ந்தால் பல லட்சம் பேர் இடம்பெயர்வர்

கடந்த பன்னிரண்டு மாதங்களில் இரண்டு லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மோதல் நிலைமை தொடருமானால் இத னைப் போல இரட்டிப்பு மடங்கானோர் வீடு வாசல்களை இழப்பர் என ஐ.நா.மதிப்பிட் டுள்ளது.

இலங்கை மீதும், இலங்கை மக்கள் மீதும் அமெரிக்கா கொண்டுள்ள அதேயளவு சிரத்தையை, தனது நடைமுறைப்படுத்தும் முகவர் அமைப்புகள் உதவித் திட்டங்களைச் செயற்படுத்தும்போதும் எதிர்கொள்ளும் கஷ்டங்களின் விடயத்திலும் அமெரிக்கா கொண்டுள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

புலிகளுக்கு எந்த உதவியும் வழங்கப் படக்கூடாது என்ற விடயத்தில் அமெரிக்காவின் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் கடுமையான விதிமுறைக்கு உட்படுத்தப்பட்டே உள்ளன.

மனிதாபிமான விநியோகங்கள் புலிக ளின் கைகளுக்குக் கிட்டுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்குமானால் அவை அனைத்தும் குறித்து விசாரணை நடத்தி அமெரிக்கச் சட்டங்களை மீறியுள்ளோரைத் தண்டிப்ப தற்கு இந்தத் தொண்டர் அமைப்புக்களும் அமெரிக்க அரசும் முழு அளவில் ஒத்துழைத்து உதவும்.

நல்லாட்சி, வெளிப்படையான தன்மை, மனித உரிமைகள் மதிக்கப்படல், சட்டத்தின் ஆட்சி என்பன பொருளாதார அபிவிருத்திக்கும் நிலையான சமாதானத்தை ஏற்படுத்து வதற்கும் அடிப்படையான முன் தேவைப் பாடுகளாகும்.

நாட்டின் பிணக்கோடு சம்பந்தப்பட்ட முக்கிய விடயங்களைக் கையாள்வதற்கு ஜனாதிபதியும் அவரது அரசும் எடுத்துள்ள சில நடவடிக்கைகளை அமெரிக்கா விதந்து ரைக்கிறது. குறிப்பாக மனிதாபிமான விடயங்களுக்கான கலந்தாலோசனைக்குழு ஸ்தாபிக்கப்பட்டமை, இலங்கைப் பிணக்குக்கு முடிவைக்கொண்டு வரக்கூடியதான சமாதானப் பேச்சுக்களை புலிகளுடன் ஆரம்பிப்பதற்கு பொருத்தமான அதிகாரப் பகிர்வு யோசனைத்திட்டம் ஒன்று உருவாக் கப்படவேண்டும். அதை உருவாக்குவதற்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை இலங்கை சரி வரப் பயன்படுத்திக்கொள்ளும் என அமெரிக்கா எதிர்பார்க்கிறது - என்றார் அவர். (அ)

## புலிகளின் பிடியில் இருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சரத் அமுனுகம வரவேற்புரை நிகழத்தியதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றினார்.

ஜனாதிபதியின் நீண்ட உரையில் அவர் கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு:-

இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காணும் நோக்குடன் நடத்தப்பட்ட பேச்சுகளில் புலிகள் கலந்துகொள்ளாததன் மூலமும் புலிகள் வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள குந்தகம் விளைவித்து, பொது மக்கள், பொதுச்சொத்துக்கள், பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் செலவீனங்கள் அதிகரித்தன.

புலிகளின் வன்முறையும் பயங்கரவாத நடவடிக்கைகளும் இல்லாதிருந் திருந்தால் தென் பகுதியில் காணக்கூடியதாகவுள்ள இதேவேகமான அபிவிருத்தியினை வடக்கு, கிழக்கிலும் காணக்கூடியதாக இருந்திருக்கும்.

எமது நாடு பல்வேறுபட்ட சமூகங்களுக்கிடையில் தேவையான ஒருமைப்பாட்டுடன் ஜனநாயகத் தீர்வொன்றினைக் காண்பதற்கு நீண்ட முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதுவொரு நீண்ட வரலாறாகும். சில ஜன நாயகத் தீர்வுகள் சுதந்திரம் அடைந்ததில் இருந்து தொடர்ந்து வந்த அரசுகளினால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எவ்வாறாயினும் அவ்வாறான முயற்சிகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதொரு தீர்வை வழங்குவதில் வெற்றிதரவில்லை. பிரதானமாக இனப்பிரச்சினை மற்றும் அதிகாரப் பகிர்வு விடயங்களில் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதொரு தீர்வொன்றினை வழங்கவில்லை. இலங்கையிலுள்ள அனைத்து ஜனநாயகக் கட்சிகளும், சர்வதேச சமூகமும் இந்த சூழ்நிலைக்குச் சரியான பதில், பயங்கரவாதம் அல்ல என்பதையும் இதற்கான இறுதித் தீர்வினைக் காண்பதற்கான வழியொன்றினைத் தேட வேண்டும் என்பதில் இணங்கியுள்ளன.

### பயங்கரவாதத்தை ஒழிக்க கைகோர்க்க வேண்டியுள்ளது

எமது நாடு பயங்கரவாதத்தினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இது [illegible] பயங்கரவாத நிலைமையினை சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்தி விடுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. நாம் ஒரு நாடு என்ற வகையில், அப்பாவிப் பொதுமக்களையும் தேசியத் சொத்துக்களையும் அழிக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பதில் நடவடிக்கை எடுக்கும் அதேநேரம், அரசியல் பேச்சுகள் மற்றும் அரசமைப்புத் தீர்வுகள் என்பவற்றின் ஊடாக அடிப்படைக் காரணங்களை இனங்காண்பதன் மூலம் பயங்கரவாதத்தினை அணுகுவதற்கு சர்வதேச சமூகத்துடன் கைகோர்த்து செயற்பட வேண்டியுள்ளது.

பயங்கரவாதத்தினை வெற்றி கொள்வதில் எமது இலக்கானது, அதனால் பாதிக்கப்பட்ட மக்களை விடுதலை பெறச் செய்வதாகும். இவ்வாறான விடுதலை நடவடிக்கையில் நாம், மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும் ஜனநாயகம் மதிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

வடக்கு, கிழக்கு பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவது இன்றியமையாதது என்றே நாம் கருதுகிறோம். பல்லின மற்றும் பல்வேறு சமயங்களைச் சார்ந்த சமூகத்தில் மிகவும் ஆழமாக வேரூன்றிக் காணப்படும் பிணக்குகளுக்கு அர்த்தபுஷ்டியான தீர்வுகளைக் காண்பதிலும் இவ்விடயம் முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே, எமது அபிவிருத்திப் பங்காளர்கள் கலாசார ரீதியாகவும் வருமான ரீதியாகவும் வேறுபாடுகள் உள்ள பல கலாசார சமூகத்தில் ஏற்படும் பிணக்குகளின் நிலைமைகளில் இருந்து பயங்கரவாதத்தினை வேறுபடுத்திக் காண்பார்கள் என்பதில் எனக்கு எந்தவித ஐயமும் இல்லை. அடிமட்டத்திலுள்ளவர்களை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் எமது "கமநெகும" நிகழ்ச்சித் திட்டமானது, சமூகத்தினை வலுவூட்டுவதற்கு உறுதியான அத்திபாரமொன்றினையிடும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. எனவே, "மகிந்த சிந்தனை - 10 வருடத் திட்டம்" என் பதை அடிப்படையாகக் கொண்டு புதிய இலங்கையை கட்டி எழுப்பவும் மற்றும் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை முன்கூட்டியே அடைந்துகொள்ளவும் எமது தூய்மையான [illegible] பணியில் - எமது அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து முழுமையான ஒத்துழைப்பினை நான் வேண்டி நிற்கின்றேன் - என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயக் கல்லூரி நேர்முகப்பரீட்சை இங்கு

யாழ்ப்பாணம், ஜன.30

விவசாயக் கல்லூரிகளில் பயில்வதற்கு தெரிவுப் பரீட்சையில் சித்தி அடைந்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர் முகப் பரீட்சை இங்கு நடத்தப்படும்.

விவசாயத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் அறிவுறுத்தலின் பேரில் நேர் முகப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாக மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் உதயனுக்குத் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் சம்பந்தப்பட்டோருக்கு விரைவில் அனுப் பப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ-88)

## வவுனியாவில் கிரனேட் வீச்சு

வவுனியா, ஜன.30

வவுனியா சூசைப்பிள்ளையார் குளம் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற கிரனேட் வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் பொலிஸார் இருவரும் சிவிலியன் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

காலை 9.55 மணியளவில் பொலிஸார் மீது இனந்தெரியாதோர் கிரனேட் வீசித் தாக்கினர். பொலிஸார் திருப்பித் தாக்கியபோது சிவிலியன் ஒருவருக்கு காயம் ஏற்பட்டது.

காயமடைந்த பொலிஸாரில் ஒருவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்பட்டது.

திங்கட்கிழமையான நேற்றுக்காலை பரபரப்புடன் காணப்பட்ட வவுனியா நகரப் பகுதி இந்தச் சம்பவத்தை அடுத்து வெறிச் சோடியது. (ஐ-312)

## ஹெல உறுமயவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, மஹிந்த சிந்தனையில் கூறப்பட்டபடி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயல்படுவார் என தங்களுக்கு உத்தரவாதம் தந்தால் மட்டுமே அரசுக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

சுற்றாடல் அமைச்சுப் பதவியை ஏற் பதா, இல்லையா என்பது பற்றி இதுவரையில் எதுவித முடிவும் எடுக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார். (த)

## இராணுவ ஆக்கிரமிப்பை மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை பெருப்பிப்பது இலங்கையை அதல பாதாளத்துக்குள்தான் வீழ்த்தப்போகின்றது. இலங்கை பாகிஸ்தானிடமிருந்து பெருமளவிலான ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்கிறது. இதன்மூலம் இந்தப் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் சூழ்நிலையை அது உருவாக்குகின்றது. இலங்கை அரசின் இந்தப் போக்கை இந்தியா உட்பட இந்தப் பிராந் தியத்தின் ஏனைய நாடுகள் அனுமதிக்கமாட்டா என்று நான் நம்புகிறேன்.

**பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்கள்**

இலங்கை பாகிஸ்தானிடமிருந்து பெருமளவான இராணுவ ஆயுத தளபாடங்களையும் உதவிகளையும் பெற்றுவருகின்றது என்பதை நாம் அண்மையில் உறுதிப்படுத்தியுள்ளோம். இது பயங்கரமானது. ஆனால், இலங்கை அரசின் இந்தச் செயற்பாடு அதற்கு வெற்றியைத் தேடித்தரும் என்று நான் நம்பவில்லை. தமிழின அழிப்பில் இலங்கையரசு ஈடுபட்டுள்ளது என்று தெரிந்து கொண்டு அதற்கு உதவும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் அதுவே பின்னர் பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்றே நான் நினைக்கின்றேன்.

**விமானப்படையைத் தோற்கடிக்க யுக்திகளைப் பயன்படுத்துவோம்**

விமானப்படையின் யுத்த விமானங்கள் ஏதோ நேற்றுத்தான் இந்த யுத்தத்துக்கு கொண்டு வரப்பட்டவையல்ல. எங்கள் போராட்டம் முழுவதும் இலங்கையின் விமானப்படை, கடற்படை, தரைப்படை ஆகியவற்றை நாம் எதிர்கொண்டே வந்துள்ளோம். 2000ஆம் ஆண்டில் வன்னிப் பெருநிலப்பரப்பை மீளக் கைப்பற்றியபோதும், ஆனையிறவை மீட்ட போதும் கூட இதே விமானப்படையை நாம் எதிர்கொண்டோம். இறுதியில் இந்த யுத்த விமானங்களை அவற்றின் விமான நிலையத்திலேயே நாம் அழித்தோம். அந்தச் சரித்திரம் எல்லோருக்கும் தெரியும். இந்தக் கூலிப்படைகளைத் தோற்கடிக்க எமது தலைமையிடம் பல தந்திரோபாயங்கள் உண்டு. அவர்களைத் தோற்கடிக்க எதிர்காலத்தில் அந்த யுத்திகளை நாம் பயன்படுத்துவோம். மக்களின் மனோபலம் மற்றும் தார்மீக வலுவை - எந்தச் சக்தியாலும் அது எவ்வளவு வலுவாக இருந்தாலும் தோற் கடிக்கமுடியாது என்பதே எமது உறுதியான நம்பிக்கை. நாங்களே வெல்வோம் -

இப்படி தமிழ்ச்செல்வன்கேட்டியில் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில் அச்சுத்தாள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளர் மறுத்து வருகிறார்.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகைகள் கடும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றன. எங்களுக்குக் கிடைத்த தகவல்களின்படி யாழ்ப்பாணப் பத்திரிகைகள் மூன்றும் இப்போது நான்கு பக்கங்களுடன் மட்டும் வெளிவருகின்றன. அச்சிடும் பிரதிகளின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்துவிட்டன.

உதாரணத்துக்கு உதயன் பத்திரிகையை எடுத்துக்கொண்டால், யாழ்ப்பாணத்தில் அதிக விற்பனையுள்ள பத்திரிகை அது. 22,000 பிரதிகள், 16 பக்கங்களில் உதயன் வெளிவந்து கொண்டிருந்தது. இப்போது நான்கு பக்கங்களில் 7,500 பிரதிகள் மட்டுமே அச்சிடப்படுகின்றன. வெகு விரைவில் பக்கங்கள் இரண்டாகக் குறைக்கப்படலாம். பத்திரிகை அச்சுத்தாளோ, மையோ கிடைக்காவிட்டால் உதயன் பத்திரிகையை மூடவேண்டி ஏற்படலாம். யாழ்ப்பாணத்தில் வானொலி நிலையங்களோ தொலைக்காட்சி நிலையங்களோ இல்லை. பிரதேச மக்கள் பத்திரிகைகள் மூலமே செய்திகளை அறிந்து கொள்கிறார்கள் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

தகவல் கிடைக்கப்பெறுவது ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு மிக முக்கியமான தேவை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். பத்திரிகைகள் மூலம் மக்களுக்குத் தகவல் கிடைக்காத பட்சத்தில் மிகைப்படுத்தப்பட்ட வதந்திகள் மக்களைச் சென்றடையும். அவை ஸ்திரமற்ற நிலையையும் வன்செயல்களையும் ஏற்படுத்தும்.

மக்களுக்குத் தகவல்களைக் கொடுக்கும் தமது முக்கிய பணியை யாழ்ப்பாணப் பத்திரிகைகள் செய்வதற்காக யாழ்ப்பாணத்தில் அச்சுத்தாளும் மையும் வழங்கப்படுவதற்குத் தங்களால் முடிந்த எல்லா முயற்சிகளையும் தாங்கள் செய்யவேண்டும் என்று தங்களை வேண்டிக்கொள்கிறோம். குறிப்பாக, யாழ்ப்பாணத்துக்குக்கொண்டு செல்லப்படும் பொருள்களில் பத்திரிகை அச்சுத்தாளையும் மையையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தங்களால் முடிந்த விரைவில் எங்களுடன் தொடர்புகொள்வீர்கள் என்று எதிர்பார்த்து இருக்கிறோம். இப்படி இரண்டு சுதந்திரப் பத்திரிகை அமைப்புகளும் உதவி வழங்கும் நாடுகளின் தூதுவர்களுக்குத் தாம் அனுப்பியுள்ள பகிரங்கக் கடிதத்தில் தெரிவித்திருக்கின்றன.

## விமானச் சீட்டுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுத்துண்டுகளைப் பெறுவதற்கும் வரிசையில் இடம்பிடிப்பதற்கெனவும் மக்கள் முண்டியடித்தனர். அதன்போது ஏற்பட்ட நெரிசலில் சிலர் காயங்களுக்கு ஆளாகினர். சிறிது நேரம் அங்கு களேபர நிலை காணப்பட்டது. அந்தக் களேபரத்தில் வரிசையில் நின்ற பெண்மணி ஒருவர் மயங்கி வீழ்ந்தார். அதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் இராணுவத்தினரின் பிரசன்னமும் காணப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கு இப்போதுள்ள ஒரேயொரு மார்க்கம் வான்வழிப் பயணம் மட்டுமே. அதனால், விமானப் பயணத்தை நாடுவோர்எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.


PC Park
Kingston 1GB
U3 Flash Drive
3500/=
5Years Waranty
633, K.K.S Road, Jaffna.
021 222 9581
0773068998

BRIGHTMAN
பேச, எழுத, வாசிக்க
சிங்களம்
பேராசிரியர் லிலாக்கிருஸ்ணன்
30.01.2007

விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள MD 90 (Model 22) மோட்டார் வண்டி விற்பனைக்குண்டு.
T.P.: 0776288718

உடன் தேவை
அச்சகத்தில் வேலை அனுபவம் உள்ள கணனி இயக்குநர்கள் தேவை. யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. பெயர், விலாசம், தொலைபேசி எண், நீங்கள் பெறவிரும்பும் சம்பளம், வேலை அனுபவம், போன்ற விவரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல : 2947, மே/பா உதயன்.

விற்பனைக்கு
Sony T.V 14, சாப் டி.வி.டி பிளேயர் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0779565522

NEW SCIENCE COLLEGE
2008
மாணவர்களுக்காக
Mon, Thu : 3.30-4.30
ஆரம்பம் : 01.02.2007
Sat, Sun : 11 - 12.30
Mon, Wed : 2.30-3.30
ஆரம்பம் : 31.01.2007

வீடு வாடகைக்குண்டு
யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் இருந்து ஐம்பது மீற்றர் தூரத்தில் நெல்லியடி திருமகள் லேன் வீதியில் சகல வசதிகளுடன் அரசாங்க, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும். வாகன பழைய உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் 0777224754, 021 226 4206.

மணமகன் தேவை
கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த 32 வயதையுடைய அரச சேவையில் பணியாற்றும் சுண்டிக்குளியில் சொந்த வீடுவளவையுடைய பெண்ணுக்கு 6 வயதிற்கு மேற்படாத நிரந்தர உத்தியோகமுடைய மணமகன் தேவை.
தொடர்பு: 85, இராசாவின் தோட்டவீதி, யாழ். 021 4590731

16வருட சேவையில்......
ஏசியன் அக்கடமி
கேணியடி, கொக்குவில் மேற்கு.
ஆசிரியர் தேவை
தமிழ் - தரம் 9, 10, 11
முயற்சியாண்மை - 10, புவியியல் - 10.
Mobil : 0779590521.

VCM INSTITUTE
A/L 2009
இணைந்த கணிதம்
B. ரவீந்திரன் B.Sc
ஆரம்பம் 01.02.2007 (வியாழன்)
11.30 a.m.




பாராட்டி வாழ்த்துகின்றோம்

இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த ஜெயசேகரசிங்கம் - சசிகலாதேவி தம்பதியரின் செல்வப்புதல்வன்

**அபிராஜ்**

யா/அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கல்வி கற்று 2006இல் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளைப்பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ள இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவரைக் கற்பித்த அதிபர், ஆசிரியர் அனைவரையும் பாராட்டுவதுடன், மேலும் கல்வித்துறையில் சிறந்து விளங்க இறைவன் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

இமையாணன் மேற்கு, அல்வாய் வீதி, உடுப்பிட்டி. (57630)
அம்மா, அப்பா, பெரியண்ணா, சின்னண்ணா, அக்கா.

### நயினையில் தைப்பூச விழா அன்னதானம்



எதிர்வரும் தைப்பூசத்தினத்தன்று நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்களின் நலன்கருதி அமுதசுரபி அன்னதான மண்டபத்தில் வழமைபோல அன்னதான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம். "அன்ன பூரணி" அமுதசுரபி இறை பயணிகள் இல்லத்தில் தங்குவதற்கான வசதிகளும் கிடைக்கப்பெறும்.

ஓம் சக்தி

அமுதசுரபி மண்டபம்
பிரதான சாலை, நயினாதீவு - 2.
பதிவு எண்: எஸ். 236
நிர்வாகம்.

### இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூசத் திருவிழா

01.02.2007 வியாழக்கிழமை காலை 6 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும். பிற்பகல் 2 மணிக்கு வசந்தமண்டப் பூசை நடைபெற்று அதனைத் தொடர்ந்து அழகிய திருமஞ்சத்தில் சுவாமி வீதியுலா வரும் அருங்காட்சி நடைபெறும்.

(57609) உபயகாரரும், நிர்வாகத்தினரும்.

### சமூக தொழில் நுட்பக் கல்வி நிலையம், சுழிபுரம்

Reg.No : VW/SW/A/NGO/2002/03

**பதவி வெற்றிடம்**

**போதனாசிரியர்கள் - 02**

1) வானொலி, தொலைக்காட்சி தொழில்நுட்பம்.
2) அலுமினியம் பொருத்துதல் தொழில்நுட்பம்.

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் NCT/NTT ஆகிய சான்றிதழ்களுடன் 3வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் 09.02.2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நேரில்வரவும்.

(57610) இயக்குநர்.

### கண்ணீர் அஞ்சலி



யாழ். இந்து முன்னாள் ஆசிரியரும் மெய்கண்ட ஆதீன முதல்வரும், எமது கழக முன்னாள் உறுப்பினருமான "சிந்தாந்த சரவம்"

கே. கணபதிப்பிள்ளை அவர்கள்

சிவபதமெய்தியுள்ளமை குறித்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஆசிரியர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.


Computer Courses
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN AutoCAD
Start On :- 03.02.2007
Note :- கீழுள்ள புதிய முகவரியில் பயிற்சிநெறிகள் யாவும் நடைபெறுகின்றன.
Softview Computer College
55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170


## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை சிவரெத்தினம்

(சிவரட்ணம் பேக்கரி உரிமையாளர்)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவரெத்தினம் நேற்று (29.01.2007) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்வெட்டித்துறை. (57615) தகவல்: மகன்.

### செல்லையா உருத்திரமூர்த்தி

கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா உருத்திரமூர்த்தி நேற்று (29.01.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் செல்லையா - பரமேஸ்வரி தம்பதியரின் மகனும் மல்லிகா தவியின் கணவரும் மகிந்தன், யாழினி, நிதேறுகன், நிதர்சன், ஜீவன்யா ஆகியோரின் தந்தையும் உருத்திரகுமார் (சுவிஸ்), நவாஸ்வரன் (நெதர்லாந்து), சிவகௌரி, சிவசுதன் (இத்தாலி), காலஞ்சென்றவர்களான கலைவாணி, மாலினி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2007) செவ்வாய்க் கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப், பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்தியடி வீதி, கச்சாய் றோட், கொடிகாமம்
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி மகேஸ்வரி வரதராஜா

சண்டிலிப்பாய், 7ஆம் கட்டையடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி வரதராஜா நேற்று (29.01.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை வரதராஜாவின் (இளைப்பாறிய உத்தியோகத்தர், மத்திய வங்கி) மனைவியும் காலஞ்சென்ற முருகேசபிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை - மாணிக்கம் தம்பதியரின் மருமகளும் ஜெயக்குமார் (பிரான்ஸ்), பாலகுமார் (லண்டன்) ஆகியோரின் தாயும் கஜானி (பிரான்ஸ்), கௌந்தி (லண்டன்) ஆகியோரின் மாமியும் இராஜரட்ணம், குணரட்ணம் (லண்டன்), அரியமலர், பரமானந்தம், சிவனேசன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை, கைலாசபிள்ளை (கனடா), காலஞ் சென்ற மனோன்மணி, மற்றும் விஜயரட்ணம் (கனடா) தவலெட்சுமி ஆகியோர்ரின் மைத்துனியும் ரவிராமின் (பிரான்ஸ்) பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2007) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7ஆம் கட்டையடி, சண்டிலிப்பாய். (57626)
தகவல்: சி.வரதராஜா (கணவர்).

### சின்னப்பா பொன்னம்பலம்



(ஓய்வுபெற்ற பண்டகசாலைப் பொறுப்பாளர், Royal Ceylon Navy, Trincomalee)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பா பொன்னம்பலம் நேற்று (29.01.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பா - சின்னம்மா தம்பதியரின் மகனும், பூமலரின் கணவரும், பூவேந்திரன் (South Africa - Chief Engineer) பாலசரோஜா (U.K.) ஆகியோரின் தந்தையும் குகனேசன் (U.K. - Accountant), சிறிரஞ்சனி(South Africa) ஆகியோரின் மாமனும் நிரோஜன், தாரணி, கார்த்திக், கரிகரன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, தில்லைநாயகி (Australia), தெய்வநாயகி ஆகியோரின் சகோதரனும், சிறீகாந்தன், ஜெயரட்ணம், ரவீந்திரன் ஆகியோரின் பெரிய தந்தையும் காலஞ்சென்ற ரட்ணசிங்கம் (ஆசிரியர்) மற்றும் நவரட்ணம், பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற சிவயோகமலர் மற்றும் ராணிமலர், பற்குணமலர் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2007) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மய்யானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சேச்வேலன், உடுவில் (57632)
தகவல்: பொ. பூமலர் (மனைவி).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org